விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 23 புதன்கிழமை (07.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 78

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கன்னாதிட்டியில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கன்னாதிட்டி வீதியில் வைத்து நேற்று மாலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சுட்டுக் கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் நிஷாந்தன் (வயது-30) எனத் தெரிவிக்கப்பட்டது.

தொலைத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் தொடர்பாக விவாதிக்க அமெரிக்கப் பிரதிநிதி இலங்கை வருகை

மனித உரிமை, அமைதிப் பேச்சுக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக அமெரிக்காவின் மூத்த பிரதிநிதி ஒருவர் இவ்வாரம் இலங்கை வரவுள்ளதாக அமெரிக்கத் தூதரக வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சரின் ஆசியப் பிராந்தியத்திற்கான பிரதி உதவியாளரான சிறீவன் மான் நாளை வியாழக்கிழமை வருகை தந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அரச அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## ஆட்டோ சாரதி சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் நேற்றுக் காலை 8.45மணியளவில் வீட்டிற்குச் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகளினால் ஆட்டோச் சாரதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த உடன்படிக்கை அரசியல் யாப்பை மீறவில்லை

## சட்டபூர்வமானது என நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு சட்டபூர்வமானது எனவும், அது இலங்கையின் அரசியல் யாப்பை மீறவில்லை எனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.** (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கிளைமோர் தாக்குதல்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மல்லாவி பாலைப்பாணி வீதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் பொதுமக்கள் வாகனம் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தியுள்ளதாகக் கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று மாலை மல்லாவியிலிருந்து பொதுமக்களை ஏற்றிக் கொண்டு பாலைப்பாணி நோக்கிச் சென்று கொண்டிருந்த வாகனம் மீது (04 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்ட விதிகளுக்கமைய முடிபெடுக்க அரச அதிபருக்கு அதிகாரம்

(கொழும்பு)

அவசர காலச் சட்ட விதிகளுக்கு அமைய தீர்மானங்களை எடுப்பதற்கு தகுதி வாய்ந்த அதிகாரியாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கமைய யாழ்.குடாநாட்டில் அத்தியாவசிய பொருள்களைத் தெரிவு செய்தல், அவற்றுக்கான விலைகளை நிர்ணயம் செய்தல் போன்ற செயற்பாடுகளைத் தீர்மானிக்க அரச அதிபருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்களை நிர்ணயித்தல், அதனை மீறுவோர், மோசடியில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க அரச அதிபருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்ப்பாணத்தில் கடந்த இரு நாள்களில் கைது தொடர்பாக ஐந்து முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் கடந்த இரண்டுநாட்களில் 5 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதுடன் வெள்ளைவான் ஆயுததாரிகளால் இருவர் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை புலோலி மேற்கு கம்பர் மலையில் தோட்டத்தில் நின்ற வேலாயுதம் கிருஷ்ணகோபன் (வயது-19), கந்தையா செல்லக்குமார் (வயது-21) மற்றும் கோவிந்தராஜா கிருபாகரன் (வயது-22) ஆகிய மூன்று இளைஞர்களையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மோட்டார் சைக்களில் வந்த இராணுவத்தினர் கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர் என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## 83 இலங்கை அகதிகளையும் திருப்பி அனுப்புவதில் அவு.தீவிரம்

(கொழும்பு)

கிறிஸ்மஸ் தீவில் கைது செய்யப்பட்ட 83 இலங்கைத் தமிழர்களையும் அங்கு வைத்திருக்கப் போவதில்லை என அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் அலெக்சாண்டர் டௌனர் இதனை நேற்றுத் தெரிவித்துள்ளார். கிறிஸ்மஸ் தீவில் கைது செய்யப்பட்ட 83 இலங்கைத் தமிழர்களையும் திருப்பி அனுப்பாவிட்டால் அவர்களுக்கு சட்டபூர்வ அகதிகள் அந்தஸ்து அளிக்கப்பட்டு விடும்.

இச் செயற்பாடு சட்டவிரோதமாக புகலிடம் கோருவோருக்கும் ஆட்களைப் பணத்திற்காக அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து வருவோருக்கும் சாதகமாக அமைந்துவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கைது செய்யப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை வீரர் சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியாவில் வைத்து நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் விமானப் படை வீரர் ஒருவர்சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மருந்தகம் ஒன்றுக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவர் மீது இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆட் கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் இராணுவத்திற்கும் பொலிஸிற்கும் தொடர்பு

### பொலீஸ் மா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமல் போதல் மற்றும் கடத்தப்படுதல் சம்பவங்களின் பின்னணியில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்கள் எனக் கூறப்படுவோர் உள்ளடங்கியுள்ளதாக பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். பயங்கரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் தமிழர்களும் சிங்களவர்களும் அடங்குகின்றனர்.

பயங்கரவாத நடவடிக்கை தொடர்பான சந்தேகத்தில் இதுவரை 452 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 61 பேர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 19 பேர் ஒரே சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையோர் தகுதிபாராது கைது செய்யப்படுவர் என பொலிஸ் மா அதிபர் எச்சரித்துள்ளார். கப்பம் பெறும் சம்பவங்களில் விடுதலைப்புலிகள் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரப் பகுதியில் நேற்று 5 சடலங்கள் மீட்பு

(அநுராதபுரம்)

வட மத்திய மாகாணமான அநுராதபுர மாவட்டத்தில் உள்ள செம்புகுளம் கிராம சேவையாளர் பிரிவில் நேற்றுக்காலை ஒன்றாகக் கட்டப்பட்ட நிலையில் 5 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்களின் மேற்பகுதி ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டுள்ளதாகவும் காலை 6.30 மணியளவில் கிராம மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து சடலங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் திரப்பன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் அனைத்தும் ஆண்களுடையவை எனவும்தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் வேறு ஒரு இடத்தில் கொல்லப்பட்டு இங்கு கொண்டு (04 ஆம் பக்கம் பார்க்க)

## அதிருப்தியாளர்கள் குழு இணைந்து புதிய கட்சியை உருவாக்கத் திட்டம்

### ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பு எனப் பெயரிட முடிவு?

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உள்ள முதன்மைக் கட்சிகளின் அதிருப்தியாளர்கள் ஐக்கிய சுதந்திரக்.கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியை அமைக்கவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மங்கள சமரவீர உள்ளிட்டவர்களும் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து இக் கட்சியை உருவாக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான செயற்பாடுகளுக்காகவே (04 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீது இந்திய அரசாங்கம் பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும்

## மாவை சேனாதிராசா எம்.பி.கோரிக்கை

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினை மீறும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

எனவே இலங்கை மீது இந்தியா பொருளாதாரத்தடையினை விதிக்கவேண்டியது அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய மாவை சேனாதிராசா எம்.பி. அதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது, இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். இதன் மூலம் மாதம் தோறும் 50 பேர் கொல்லப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இரண்டரை இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 500 பேர் காணாமல் போயிருப்பதாக சர்வதேச அமைப்பில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் பாதை மூடப்பட்டுள்ளது. இதனால் நான்கரை இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து சர்வதேச அமைப்புக்களிடம் முறையிட்ட பிறகு கடல் வழிப்பாதை திறந்து விடப்பட்டுள்ளது.

இப் பகுதியில் உள்ள மக்களுக்கு கடந்த எட்டு மாதங்களாக உணவுப் பொருட்கள் கிடைப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறை காரணமாக சுமார் ஒன்பதரை இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் பட்டினிச்சாவு ஏற்படும் சூழல் உள்ளது. இலங்கையில் மீண்டும் போர் ஏற்படும் சூழல் இருப்பதாக அஞ்சுகிறோம். இந்திய- இலங்கை உடன்படிக்கையை மீறி இலங்கையில் வடக்கு கிழக்கு என நிர்வாகம் பிரிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்க சர்வதேச அமைப்புக்கள் ஆவன செய்ய வேண்டும். மேலும் இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்கவேண்டும் என்றார். (ச)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம்,நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க.வித்தியாலயம், மண்கும்பான் அ.த.க.வித்தியாலயம் ஆகிய பாடசாலையில் அதிபர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் பதவிக்கு இ.அ.சேவை,2-II அல்லது III ஐ சேர்ந்தவர்களும் இ.அ.சேவையில் 1 , 2-I, 2-II இல் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தீவக வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் எ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ச)

## அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்யும் சட்டத்தில் திருத்தம்

ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் திருப்தியான மட்டத்தில் இல்லை என்ற காரணத்தினாலும் அவை தேவையற்ற பணிகளில் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தும் இலங்கையில் தொண்டர் அமைப்புக்கள் தொடர்பாக 1980 ஆம் ஆண்டு 31ஆம் இலக்க தொண்டர் அமைப்புக்களை பதிவு செய்யும் மற்றும் கண்காணிக்கும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை மேற்கொள்ள என நியமித்திருந்த குழுவினது அறிக்கை கடந்த வாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினது அறிக்கையை ஆராய்ந்து அரச சார்பற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராய என நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் யோசனைகளையும் பெற்றுக்கொண்டு தேவையான திருத்தங்களை முன்வைக்கவுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவில் நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகமாகவும் குறைகேள் அதிகாரியாகவும் செயற்பட்ட சாம் விஜேசிங்க , ஜீவன் தியாகராஜா மற்றும் சட்டத்தரணி விந்தியா குணரத்ன ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (ச-5)

## விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய நால்வர் இன்று நீதிமன்றில் ஆஜர் !

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நான்கு சிங்களவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்.

விடுதலைப்புலிகளிடம் பயிற்சி பெற்று தெற்கில் பல பிரதேசங்களில் கிளைமோர் குண்டுகளை வெடிக்க வைத்தனர் என்று கூறப்படும் இந்த நான்கு சிங்களவர்களையும் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு பிரதான நீதிபதி சரோஜினி குசல வீரவர்த்தன பயங்கரவாத தடுப்பு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மொகமட் லலித் சேனாரட்ன ,சுதுவாஹேவகே நிசான் சேரசிங்க,சிசிற பிரியங்கர, போப்பகே சுனேர பிரியங்கர ஆகியோரே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் விடுதலைப்புலிகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணி வந்திருக்கின்றனர். விடுதலைப்புலிகளிடம் போர்ப் பயிற்சி பெற்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிளைமோர் தாக்குதல்களை நடத்தி வந்துள்ளதுடன் பல்வேறு குற்றச் செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைகளின் மூலம் தெரிய வந்திருப்பதாக பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

இவர்களிடம் இருந்து பெருமளவு ஆயுதங்களும் சி-4 வகையைச் சேர்ந்த வெடி பொருட்கள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. நான்கு சிங்களவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெடிபொருட்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பது ஆபத்தானது என்பதால் அவற்றை அழித்து விட்டு எச்சங்களை இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பியுள்ளதாகவும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர். (ச-5)

## அதிக விலைக்கு பொருட்களை விற்ற ஐந்து வர்த்தகர்கள் நீதிமன்றில் ஆஜர்

### எச்சரிக்கப்பட்ட பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அதிக விலையில் அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்த ஐந்து வர்த்தகர்கள் நுகர்வோர் பாதுகாப்புச் சபை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஐவரும் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்த யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா அவர்களை எச்சரித்து விடுதலை செய்தார்.

யாழ்.நவீன சந்தை,ஆஸ்பத்திரி வீதி, முடவமாவடி மற்றும் கே.கே.எஸ்.வீதி ஆகிய இடங்களைச் சேர்ந்த குறித்த 5 வர்த்தகர்களும் அத்தியாவசிய பொருட்களை அதி கூடிய விலையில் விற்பனை செய்தனர் என நுகர்வோர் பாதுகாப்பு சபையினரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நுகர்வோர் பாதுகாப்புச் சபையினரால் ஆஜர் செய்யப்பட்ட 5 வர்த்தகர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா இவ் வழக்கு சாதாரண சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்டமையால் கட்டுப்பணத்துடன் மட்டும் விடுதலை செய்வதாக குறிப்பிட்டார்.

இதேவேளை இனிவரும் காலப்பகுதியில் யாழ்.அரச அதிபர், பிரதேச செயலாளர்களினூடாக தனியார் வர்த்தகர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் யாழ்.குடாநாட்டுக்கு கப்பல் மூலம் மூன்று வர்த்தகர்கள் பொருட்களை கொண்டு வருகின்றனர். இப் பொருட்களுக்கான விற்பனை விலையை அரச அதிபர் நிர்ணயிப்பார்.

எனவே அரச அதிபரினால் நிர்ணயித்த விலைகளிலேயே அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யப்படவேண்டும். கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது அவசரகால சட்ட விதிகளின் அடிப்படையில் நீதிமன்றத்தினால் கூடிய அளவு தண்டப் பணம் அறவிடப்படுவதுடன் வியாபாரத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளினால் பாரிய விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எனவும் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா ஐந்து வர்த்தகர்களையும் எச்சரித்தார். (ச-3,5)

## பிளாஸ்ரிக் பொருட்களைக் கொண்டு எரிபொருள் தயாரிக்கத் திட்டம் !

(கொழும்பு)

இலங்கையில் பிளாஸ்ரிக் பொலித்தீன் மற்றும் ரயர் போன்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி எரிபொருள் உற்பத்தியை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக பெற்றோலிய மற்றும் கனிய வளங்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் பிரிட்டிஷ் நிறுவனமொன்றும் இணைந்து தொழிற்சாலை ஒன்றினை அமைத்து இவ் எரிபொருள் உற்பத்தியை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இத் திட்டத்தினால் அந்நிய செலாவணியை கட்டுப்படுத்துவதுடன் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கலாமென சுட்டிக்காட்டிய அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இதன் மூலம் நாட்டில் பலருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப் படும் எனவும் தெரிவித்தார். (ச-5)

## கிராமசேவையாளர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை மார்ச் 10 இல்!

### யாழில் 49 நிலையங்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 49 பரீட்சை நிலையங்களில் கிராம உத்தியோகஸ் தர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் 24 பரீட் சை நிலையங்களிலும், சாவ கச்சேரியில் ஆறு பரீட்சை நிலையங்களிலும்,நெடுந்தீவில் ஒரு பரீட்சை நிலையத்திலும்,கோப்பாய் பிர தேசத்தில் நான்கு பரீட்சை நிலையங்களி லும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பிரதேசத்தில் ஐந்து பரீட்சை நிலையங்களிலும், கரவெட்டிப் பிரதேசத்தில் ஐந்து பரீட்சை நிலையங்களிலும் பருத்தித்துறை பிரதேசத்தில் நான்கு பரீட்சை நிலையங்களிலும் பரீட்சை நிலையங் கள் அமைக்கப்பட்டுள் ளன.

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை அனுமதி அட்டை விசேட விமானம் மூலம் எடுத்துவரப்பட்டு நேற்று முன் தினம் முதல் பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ச-3)

1st IN Com
G.A.Q
யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புதிய ஆண்டிற்கான பதிவுத் திகதி மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.
- பேராதனைக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

நிர்வாகி
எஸ்.அருள்நங்கை

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(ச-அ-630)

WANTED
For immediate Night Locum Duty.
M.O/R.M.O
Contact,
Medical director
Central Nursing Home (Pvt) Ltd.
350,Palaly Road,
Thirunelvely.
(647)

கண்ணாடி ஒட்டுதல் இடமாற்றம்

கடந்த பல வருடங்களாக இயங்கி வந்த ரகு போட்டோ, ரெக்னிக் ஸ்தாபனம் 5/3/2007 இலிருந்து இல. 187/6 கில்னர் லேன், கஸ்தூரியார் வீதி எனும் முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்.

உரிமையாளர்
சு.நாராயணசாமி
(646)

இடமாற்றம்

பி.ஜெ.பர்னான்டோ வாடிக்கையாளர்களின் நலன் கருதி இல. 131 பிரதான வீதி கிளையில் இயங்கி வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பல் கட்டுபவர்,கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர், மிதப்புப் பற்களுக்கான கிளிப் பொருத்துவர்கள்.

542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை 131 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(ச-634)

உரிமையாளர் A.ஜெயக்குமாரன்

நல்ல செயலைச் செய்ய நினைத்தால் உடனே செய்க.
நாளும் கோளும் நல்ல செயலுக்கு சாதகமாகவே இருக்கும்.
—சுவாமி இராமதாஸர்

வலம்புரி

## சோதிடர்கள் ஒன்று கூடி நாட்டின் எதிர்காலத்தை ஆராயலாமே!

சில தினங்களுக்கு முன்னர் நடந்த சந்திர கிரகணத்தால் அரசுக்கு எதிரான கலகங்கள் இடம் பெறும் சாத்தியம் இருப்பதாக தென்னிலங்கையின் பிரபல சோதிடர் சந்திர சிறி பண்டார தெரி வித்துள்ளார்.

சந்திர கிரகணம் நடைபெறுவதற்கு முன்னதாகவே நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியிருந்தமை தெரிந்த விடயமே.

கடந்த முப்பது ஆண்டுகளாக நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாத நிலையில் இலங்கைத் தீவு முழுவதும் அமைதியற்றிருக்கின்றது.

எனினும் 'சோதிடம்' என்ற சொற்பதம் மக்களிடையே மிக ஆழமாக ஊறிவிட்டதொன்றாகும். விஞ்ஞான விந்தைகள் சந்திர மண்டலத்தில் காலடி வைப்பதற்கு உதவியபோதிலும் சோதிடத்தில் இருக்கக்கூடிய நம்பிக்கைகளை யாராலும் முறியடித்துவிட முடியாதென்பது சர்வ நிச்சயம்.

வல்லரசான அமெரிக்கா முதற்கொண்டு அதி உச்ச வறிய நாடுகள் வரை சோதிடத்தில் நம்பிக்கை கொண்டுள்ளன.

அவ் வகையில் பிரபல சோதிடர் சந்திர சிறி பண்டார கூறியிருக்கும் விடயத்தை தேவையற்றது என ஒதுக்கிவிட முடியாது.

அண்மையில் நடந்த சந்திர கிரகணத்தால் நாட்டின் ஆளும் தரப்பிற்கு எதிரான கலகங்கள் இடம் பெறும் என அவர் கூறியிருப்பது இங்கு ஆய்விற்குரியது.

கிரகங்களின் தாக்கம் பூமியில் பிரதிபலிக்கின்றது என்ற கருத்தியலும் அது மனிதர்களின் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துகின்றது என்ற கருத்தியலும் விஞ்ஞான உலகால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே கிரகங்களின் தாக்கம் பூமிக்கும்,மக்களுக்கும் இருக்கவே செய்கின்றது. அவ் வகையில் இலங்கையின் அமைப்பு கிரகங்களின் தாக்கம் என்பன குறித்த சோதிட ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

அண்மையில் நடந்த சந்திர கிரகணத்தால் எதிர்காலத்தில் அரசுக்கு எதிரான கலகங்கள் நடைபெறும் என சோதிடர் கூறுவதற்கு முன்னதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார நாளிதழ் ஒன்று, இலங்கையில் பாரிய யுத்தம் வெடிக்கும் அபாயம் இருப்பதாக, சோதிடர்கள் கணித்துள்ளதாக கட்டுரை எழுதியிருந்தது.

தென்னிலங்கையில் உள்ள பிரபல சோதிடர்களின் கணிப்பின் பிரகாரம் இலங்கையில் பாரிய யுத்தம் இடம் பெறும் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகின்றது.

சோதிடம் என்பது எதிர்காலத்தை கணிப்பிடுவதுடன் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்கான பிராயச்சித்தங்களை முன் வைக்கும் கணிதமாகும்.

எனவே அழிவுகளைப் பற்றியும், கலகங்களைப் பற்றியும் கூறும் சோதிடர்கள் ஒன்று கூடி நாட்டின் எதிர்காலத்தை கணிப்பிட்டு எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துக்களை-அழிவுகளை தடுக்கும் உபாயங்களை முன்வைக்கவேண்டும்.

# பயங்கரமான சூழலை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கின்றது

## ஐ.தே.க.,த.தே.கூ.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடு என்ற நிலையை நோக்கியும் பயங்கரமான காலத்தை நோக்கியும் நகர்ந்து கொண்டிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியன தெரிவித்துள்ளன.

கந்தானையில் உள்ள முத்துராஜ வெவில் ஆறு சடலங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளதாவது, தமது மக்களுக்கான பாதுகாப்பை வழங்குவதற்கு அரசு தவறிவிட்டது. சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டதுடன் அது நாடு முழுவதும் பரவியுள்ளது. மனித உரிமைகள் மீறப்படுவதால் ஜனநாயகம் சீர்கெட்டுள்ளது. இந்த பயங்கரங்களுக்கு காரணமானவர்களை அரசு உடனடியாக கைது செய்யவேண்டும்.

தற்போது இங்கு வாழ்வது பிரச்சினையானது,மக்களின் வாழ்க்கை நிச்சயமற்றதாக உள்ளது. படுகொலைகளும் , கடத்தல்களும் அதிகரித்துள்ளன. தோல்வியடைந்த நாடு என்ற நிலையை நாடு அடைவதற்கு அரசு வழியை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் பாதுகாப்பிற்கு அரசே பொறுப்பானது என்பதை அரசு நிலைவில் கொள்ளவேண்டும் என்றார் அவர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளதாவது, கொழும்பில் மீட்கப்பட்ட ஆறு சடலங்களும் நாட்டில் நீதிக்கு புறம்பான படுகொலைகள்,கடத்தல்கள் அதிகரித்து செல்வதனையே காட்டுகின்றன.

இந்த பயங்கரமான சூழல் தொடர்பாக பல வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டு வரப்படும் நிலையிலும் படுகொலைகள் தொடர்கின்றன என்றார்.

இது தொடர்பாக பொதுமக்கள் கண்காணிப்புக் குழு உறுப்பினரும் மேலக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியதாவது;

நூறு பேர் வரையில் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. மக்கள் அச்சத்துடனும் நிச்சயமற்ற தன்மையுடனும் வாழ்கின்றனர். இன்று எமக்கு கடத்தல்கள் தொடர்பாக 80 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தங்களின் முக்கிய உறுப்பினர்களை இழந்து குடும்ப உறுப்பினர்கள் தவிக்கின்றனர். அவர்களின் மனக்குமுறல்களை எமக்கு தெரிவிப்பதை தவிர அவர்களுக்கு வேறு வழிகள் இல்லை என்றார் அவர். (ச-5)

# நியாயவிலையில் மருந்துப்பொருட்களை விற்பனை செய்யுமாறு அறிவித்தல்!

(கொழும்பு)

மருந்துப் பொருட்களுக்கான நியாய விலைகளை யாழ்ப்பாண சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது. அதன்படியே மருந்துப் பொருட்களை விற்பனை செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதாரப் பணிமனை வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு;

யாழ்.மாவட்டத்திலுள்ள தனியார் மருந்தகங்களுக்கும் , தனியார் வைத்தியசாலைகளுக்கும் தேவையான மருந்துப் பொருட்கள் அரசாங்க அதிபரின் முயற்சியால் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் உதவியுடன் கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டன.

இவை யாழ்.ப.நோ.கூ.சங்க மருந்தகத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள மருந்தகங்கள் மூலமாக அவ்வப்பகுதி பிரதேச செயலாளரின் சிபார்சுடன் விநியோகிக்கப்பட்டது.

ஆனால் பல மருந்தகங்களில் நியாயமற்ற முறையில் பன்மடங்கு விலையில் மருந்துப்பொருட்கள் விற்கப்படுவதாக எமக்கு பொதுமக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தற்போது பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வாழும் இம் மாவட்ட மக்களுக்கு சில மருந்தக உரிமையாளர்களின் செயற்பாடுகள் மேலும் சுமையாக அமைந்துள்ளன.

கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட முக்கிய மருந்துகளின் சில்லறை விற்பனை விலைகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை உட்பட அனைத்துச் செலவுகளையும் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் இம் மருந்துப்பொருட்கள் இந்த விலைகளிலேயே விற்கப்பட வேண்டும்.

இவ் விலைகளுக்கு மேலாக மருந்துகள் விற்கப்படின் பொதுமக்கள் அவ்வப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அல்லது மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய மருந்தாளருக்கு அல்லது உணவு மருந்து பரிசோதகருக்கு நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (222 2278) அறிவிக்கலாம் என்றுள்ளது. (ச)

# வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பான அரசின் அணுகுமுறை வெற்றியளிக்கிறது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரன் நாட்டை விட்டு தப்பியோடும் அளவுக்கு எமது படையினர் பதில் தாக்குதல்களை நடத்துவர் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பிலியந்தலையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, அரசாங்கம் தேர்தலை நடத்தப்போவதில்லை. எமக்கு பலமான அரசாங்கம் இருக்கின்றது.

அதனால் அனைத்து சக்திகளும் நிபந்தனைகளை விதிப்பதை கைவிட்டு ஜனாதிபதி தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட வேண்டும்.

ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் நாம் 15 மீாதங்களைக் கடந்து விட்டோம். 2001 முதல் 2004 வரை ரணிலின் அரசாங்கம் மேற்கத்தேய நாடுகளுக்கு சார்பாகவே நடந்து கொண்டது.

எந்த பிரச்சினை இருந்தாலும் நாட்டின் பிரதான பிரச்சினையான யுத்தத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் தீர்வைக் காண்பதற்கு ஜனாதிபதி தற்போது முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் சரியானவை என்று மக்கள் மத்தியில் கருத்துக்கள் நிலவுகின்றன.

பிரபாகரன் நாட்டை விட்டு தப்பியோடும் அளவுக்கு எமது படையினர் பதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பான எமது அணுகுமுறை மிகவும் வெற்றிகரமான பாதையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது.

சிலர் நாம் தேர்தலுக்கு தயாராகி வருவதாகக் கூறுகின்றனர். சிலர் நாம் விடுதலைப்புலிகள் மீது தேவையற்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றோம் என்று கூறுகின்றனர்.

வரலாற்றில் முதல் தடவையாக எதிர்க்கட்சியிலிருந்து 18 பேர் ஆளும் கட்சிக்கு வந்துள்ளனர். எமக்கு இப்போது நாடாளுமன்றத்தில் 121 பெரும்பான்மை பலம் இருக்கின்றது. ஜே.வி.பி.இந்த ஆண்டை எதிர்ப்பு ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

இந்த எதிர்ப்பை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு எதிராகவே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் என்பதை மறந்து விடக் கூடாது என்றார் அவர். (ச-5)

# வவுனியாவில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் உள்ள ஈரப்பெரியகுளத்தில் நேற்று கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிறப்பு அதிரடிப்படையினரின் வாகனத்தை இலக்கு வைத்து முற்பகல் 9.30 மணியளவில் இக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# ஊனமுற்ற தமிழ் மாணவர்களுக்கு அவுஸ்திரேலியா நிதியுதவி

அவுஸ்திரேலியாவிலுள்ள சுதந்திர தனிநபர் நன்கொடைத் திட்டம் என்னும் அமைப்பினரால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் உடல் ஊனமுற்ற தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான மாதாந்த நிதி உதவி வழங்குவதற்காக நிரந்தரமாக உடல் ஊனமுற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் தமிழில் எழுதப்பட்டிருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட மாணவர் நிரந்தரமாக உடல் ஊனமுற்றவர் ,வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர் என்பதை சம்பந்தப்பட்ட கிராம சேவையாளரும் பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் உடல் ஊனமுற்ற தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுப் பிரிவு ,த.பெ.இல.1353, NSW -1800, அவுஸ்திரேலியா என்னும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். (ச-5)

# நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் இன்று அரச பிரதிநிதிகளுடன் பேச்சு

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று அரச பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சிசென்ற அவர் அங்கு விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார். இச் சந்திப்பினை முடித்துக் கொண்டு நேற்று மாலை கொழும்பு சென்றடைந்த பிர ட்ஸ்கர் இன்று அரச பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார்.

இச் சந்திப்பில் விடுதலைப்புலிகளுடன் பேசப்பட்ட விடயங்கள் குறித்து விளக்கவுள்ளார். இதேவேளை இருதரப்பு சந்திப்புக்கள் குறித்தும் அதன் சாதக, பாதக விளைவுகள் குறித்தும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்முக்கு எடுத்துக் கூறுவார் என நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. (ச)

## இந்திய வர்த்தகர் கைது

இந்திய வர்த்தகர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த மூன்று வருடங்களாக விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் அவர் எங்கு கைது செய்யப்பட்டார் என்ற விபரங்கள் வெளியிடவில்லை. (ஐ)

## ஆடியபாதம் வீதியில் திருட்டுச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வடக்கு ஆடியபாதம் வீதியில் வசிக்கும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் ஒருவர் வீட்டிற்குள் நேற்று முன்தினம் நள்ளிரவில் கதவுகளைக் கோடரியால் உடைத்து உட்புகுந்த கொள்ளையர் குழுவொன்று பெருந்தொகைப் பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இக் கொள்ளையர்கள் வீட்டிலிருந்தவர்களை வாள்முனையில் அச்சுறுத்தி ஒரு இடத்தில் இருத்திவிட்டே கொள்ளையில் ஈடுபட்டதாகவும் அதற்கு முன் வீட்டின் தொலைபேசி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (ச-3,136)

# புலிகளின் காவலிலுள்ள படையினரை சந்திக்க உறவினர் கிளிநொச்சி விஜயம்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளால் வடமுனைப் போரிலும் வடபகுதிக் கடலிலும் கைது செய்யப்பட்ட 5 படையினரையும் அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம்போர் உக்கிரமடைந்த பின்னர் கைது செய்யப்பட்ட படையினர் அனைவரையும் உறவினர்கள் ஒன்றாகச் சந்திப்பது இதுவே முதற்தடவையாகும். இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பிற்கு விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 11 ஆம் திகதி முகமாலையில் இடம்பெற்ற சமரில் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி வடமராட்சிக் கடற்பகுதியில் இடம்பெற்ற கடற்சமரின் போது நான்கு கடற்படையினரும் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் உறவினர்களே இன்று சந்திக்கவுள்ளனர். (ச)

## அதிருப்தியாளர்கள் குழு...

சுதந்திரக் கட்சியின் பெயரின் ஒரு பகுதியை வைத்துக் கொண்டு புதிய கட்சிப் பெயர் வைக்கப்படத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இது மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் உடைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்பு ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில் மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கான முன்னோடி நடவடிக்கையாக மகிந்த ராஜபக்ஷ-விடுதலைப் புலிகள் இரகசிய உடன்பாடு என்ற விவகாரத்தை விசாரணை செய்ய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்குமாறும் அதிருப்தியாளர்கள் அணியைச் சேர்ந்த சிறிபதி சூரியாராட்சி வற்புறுத்தி வருகின்றார். (ச-5)

## யாழ்ப்பாணத்தில் கடந்த...

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் துரைராஜா சசிகரன் (வயது-26) என்ற இளைஞன் வீட்டிற்கு வந்த இராணுவத்தினரால் கைது செய்து அழைத்துச் சென்றதாக உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் வீட்டிற்குச் சென்ற இராணுவத்தினர் சுன்னாகம் கம்பலை மேற்கில் பாலசுப்பிரமணியம் கஜீவன் (வயது-19) என்ற இளைஞரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர்என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் சண்டிலிப்பாய் கல்வனை வீதியைச் சேர்ந்த செல்லமுத்து மனோகரன் (வயது-30) என்ற குடும்பஸ்தர் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் ஈச்சமோட்டைக்கடற்கரை வீதியில் நேற்று அதிகாலை ஒருமணியளவில் வீட்டிற்கு வந்த வெள்ளை வான் ஆயுததாரிகளால் இசிதோர் கிருஷ் தோப்பர் (வயது-24) என்ற இளைஞன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

## ஆட் கடத்தல் சம்பவங்களின்...

அதுபோன்று காணாமல் போதல் மற்றும் கடத்தப்படுதல் சம்பவங்களின் பின்னணியில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

பொது மக்கள் பாதுகாப்புச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டதன் நோக்கம் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கே அன்றி, மனித உரிமைகள் மீறல் மூலம் அவர்களைத் துன்புறுத்துவதற்காக அல்ல.

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்துப் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.பொதுமக்கள் பாதுகாப்புச் சட்ட மூலம் கொண்டு வரப்பட்டதனால் நாட்டின் பாதுகாப்புக்கான சட்டரீதியான பின்னணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளை சாதாரண சட்ட விதிகளின்படி மேற்கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கைது செய்வதன் மூலம் மனித உரிமை மீறப்படுவதில்லை. என்றார். (எ-1)

## அநுராதபுரம்...

வந்து போடப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலங்கள் மீட்கப்பட்ட இடத்துக்கு அநுராதபுர மாவட்ட நீதிவான் வசந்த ஜினதாச சென்று விசாரணைகளை மேற்கொண்டார். கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கந்தானைப் பொலிஸ் பிரிவில் உள்ள முத்துராஜவெலப் பகுதியில் இருந்து ஆறு சடலங்கள் மீட்கப்பட்டு இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

## போர் நிறுத்த...

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட போர் நிறுத்த் உடன்பாட்டின் மீது இடைக்காலத் தடையைக் கொண்டு வரவேண்டுமென இரு சிங்கள தேசியக் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிபதி எஸ்.சிறிஸ்கந்தராஜா நிராகரித்துள்ளார்.

போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளே இந்த மனுவை தாக்கல் செய்திருந்தன. இதனை விசாரணை செய்த நீதிவான் இவ்வுடன்படிக்கை சட்டபூர்வமானது. அது இலங்கை அரசியல் யாப்பை மீறவில்லை எனத் தெரிவித்தார்.

அத்துடன் அரசு, விடுதலைப்புலிகளுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர முடியாதென்ற வாதத்தையும் நீதிபதி நிராகரித்துள்ளார். ஆனால் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் செய்து கொள்ளப்பட்ட ஆழிப்பேரலை பேரனர்த்த புனரமைப்புக் கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உயர் நீதிமன்றம் தடை செய்திருந்தது.

எனினும் விடுதலைப்புலிகளுடன் உடன்பாடுகள் ஏற்படுத்தப்படுவது சட்டபூர்வமற்றது என உயர் நீதிமன்றம் குறிப்பிடவில்லை. ஆகவே போர் நிறுத்த உடன்பாடு சட்டபூர்வமானது எனவும் சிறிஸ்கந்தராஜா தெரிவித்தார். போர் நிறுத்த உடன்பாடு போன்ற அரசின் கொள்கைகளில் தலையிடும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே பி.பி.ஸியின் றொனால்ட் பூர்க்கிற்கு வழங்கிய நேர்காணலில், போர் நிறுத்த உடன்பாடு ஒரு தவறான நடவடிக்கை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னர் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## 83 இலங்கை...

பட்ட83 பேரையும் இந்தோனிஷியாவுக்கு அனுப்புவது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவர்கள் தமது நாட்டிற்கு அனுப்பப்பட்டாலும் உடனடியாக அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்படுவார்கள் என இந்தோனோஷியா தெரிவித்துள்ளது. (ச)

## முல்லைத்...

கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் வாகனம் சேதமடைந்துள்ளது. பொதுமக்களுக்கு எதுவித சேதங்களும் ஏற்படவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.(எ)

## ஆட்டோ...

இச்சம்பவத்தில் கிருஷ்ணராஜா காந்த நேசன்(வயது-23) என்ற ஆட்டோ சாரதியே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணையை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு மானிப்பாய்ப்பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச-3,5)

## கன்னாதிட்டியில்...

தொடர்பு நிலையம் ஒன்றை நடத்தி வரும் அவர், நேற்று மாலை வீட்டில் நின்றிருந்தவேளை இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரைச் சுட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்ததாக யாழ். வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)


சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்

**பதவி வெற்றிடங்கள்**

**பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.**

**01. நிர்வாக உத்தியோகஸ்தர் (Administrator)**

| பிரதான செயற்பாடுகள் | தகைமைகள் |
|---|---|
| –நிர்வாகத்தை திறமையாகக் கையாளுதல் | – முகாமைத்துவ அறிவு |
| –குழு செயற்பாடுகளின் மூலம் அங்கத்தவர்களை வழிநடத்தல் | –கணக்கியல் அறிவு<br>–ஆங்கில அறிவு |
| –நிர்வாக தொடர்புகளையும் வேலைகளையும் சீரமைத்தல் | –வயதெல்லை 40–50 |
| –கணக்குகளை ஒருங்கமைத்தல்/ ஆவணப்படுத்தல் | |

**02. சமாதான கல்வி உத்தியோகஸ்தர் (Peace Education Officer)**

| பிரதான செயற்பாடுகள் | தகைமைகள் |
|---|---|
| –சமாதானக் கல்வி தொடர்பான | –நிகழ்வுகளை முன்னின்று வழிநடத்தும் ஆற்றல் |
| பயிற்சிகளை ஒருங்கமைத்து | –வன்முறையற்ற தொடர்பாடல் பற்றிய அனுபவம் |
| ஆசிரியர் மாணவர்களுக்கு | – வேலைசார் தொடர்பான கல்விச் சான்றிதழ் |
| பயிற்சியளித்தல் | |
| –குழுக்களை நெறிப்படுத்தி தகவல்களை பரிமாறுதல் | – தலைமைத்துவம் |

**03. தொடர்பாடல் உத்தியோகஸ்தர் (Communication Officer)**

| பிரதான செயற்பாடுகள் | தகைமைகள் |
|---|---|
| –செயற்பாட்டுக் குழுக்களை நெறிப்படுத்தல் | – கணனி அறிவு (VB,Flash , C+ +) |
| –சமாதான நூலகம்(Peace Library) அமைத்தல் | – ஆங்கில அறிவு<br>–Web Designing |
| –பொதுத் தொடர்புகள் (Public Relation) | |
| –இணையத் தளம் (Website) நிர்வகித்தல் | |
| –தகவல் பிரசுரம் (Newsletter) | |
| –பொதுத் தொடர்புகளில் மக்களை பயிற்றுவித்தல் | |

**மூன்று பதவிகளுக்குமான பொதுத் தகைமைகள்**

- ஆங்கிலத்தில் உரையாட, எழுதத் தெரிந்திருக்க வேண்டும்
- கணனி அறிவு (Ms-Office & DTP)
- க.பொ.த. உ/த பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்
- வன்முறையற்ற சமாதானப் பணியில் அர்ப்பணிப்பு
- வேலை தொடர்பான துறைசார் அனுபவம்

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி 17.03.2007**

இயக்குநர்,
சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்,
இல.8, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Tel/Fax:–021 222 8131

'வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி'

(C-633)



**விசேட கருத்தரங்கு**

*கிராம உத்தியோகஸ்தர் பரீட்சை*

புதன் (இன்று)
வியாழன்
வெள்ளி
11 A.M- 4.00 P.M
SCIENCE HALL கன்னாதிட்டி

(648)



**Patrician Institutes VACANCY**

**HANDY CRAFT INSTRUCTOR**

**(நுக்கள், தலை அலங்கார போதனாசிரியர்)**

மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் 15.03.2007 ஆம் திகதிக்கு முன்பாக நேரிலோ பதிவுத் தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

(தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களையும் சமர்ப்பிக்கவும்)

*மேலதிக விபரங்களுக்கு*
பதிவாளர்:
Patrician Institutes
59,St.Patrick Rd.Jaffna.T.P: 2226148

(C-அ-633)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.